NOTICE is hereby given that the 24thAnnual General Meeting (AGM) of the Members of Uday Jewellery Industries Limited ('Company') will be held through Video Conferencing ("VC") or Other Audio-Visual Means ("OAVM"), on Thursday, September 21, 2023, at 11:30 AM IST to transact the Ordinary & Special Business as detailed in the Notice datedAugust16, 2023, convening the said AGM.

The Ministry of Corporate Affairs (MCA) has, vide its circular dated January 13, 2021, read together with circulars dated April 8, 2020, April 13, 2020, and May 05, 2020, (collectively referred to as "MCA Circulars") and the Securities and Exchange Board of India (Listing Obligations & Disclosure Requirements) Regulations, 2015, allowed convening the AGM through Video Conferencing or Other Audio-Visual Means, without the physical presence of the Members at a common venue. Hence, the AGM of the Company is being held through VC/OAVM.

**Notice of AGM and Dispatch**

In terms of Section 101 of the Companies Act, 2013 read with Rule 18 of the Companies (Management and Administration) Rules, 2014, the aforesaid Notice and the Annual Report (including Financial Statements) for the Financial Year 2022-23 have been sent through e-mail to all the Members whose e-mail addresses are registered with the Depository Participant(s) (DP)/Registrar & Transfer Agent (RTA) / Company as on 28th August, 2023.The Annual Report along with AGM Notice is available on the Company's website at www.udayjewellery.com The Notice convening the AGM is also available onwww.evotingindia.com, www.bseindia.com Members who have acquired shares in the Company after the said date, or who have not registered their e-mail address with the DP/RTA/Company can access the Annual Report on the above websites and send a request to your DP/RTA/Company for receipt of the same along with e-voting details.

**Closure of Register of Members and Share Transfer Books**

NOTICE is further given pursuant to Section 91 of the Companies Act, 2013 that the Register of Members and Share Transfer Books of the Company shall remain closed from Thursday, September 14, 2023, to Thursday, September 21, 2023,(both days inclusive) for the purpose of Annual General Meeting. Members and all other persons concerned are hereby requested to take note of the same and lodge the share transfer deed(s), if any, duly executed, with the Registrar & Transfer Agent (RTA) and also notify the change in their address/bank account particulars, if any, to the RTA (in respect of shares held in physical form) or directly to their Depository Participant(s) (in respect of shares held in Demat form) on or before September 14, 2023 ("cut-off date"). All shareholders holding shares as on the cut-off date shall be eligible to cast their vote and attend the AGM of the Company.

**Manner of Voting at the AGM (remote e-voting and e-voting at AGM)**

NOTICE is further given that in compliance with Section 108 of the Companies Act, 2013, read with Rule 20 of the Companies (Management and Administration) Rules, 2014, and Regulation 44 of the SEBI (Listing Obligation and Disclosure Requirements) Regulations, 2015, the Company is providing voting facility (remote e-voting and e-voting at the AGM) to all its Shareholders to enable them to cast their votes on all matters listed in the said Notice through electronic means.

Members will be able to cast their vote electronically on the businesses as set forth in the Notice of the AGM either remotely (during the remote e-voting period) or during the AGM (when the window for e-voting is activated upon instructions of the Chairman).

| | |
|---|---|
| **Cut-Off Date for determining the Members entitled to vote through e-voting** | Thursday, September 14, 2023 |
| **Commencement of e-voting period** | Monday, September 18, 2023 (9:00 AM) |
| **End of e-voting period** | Wednesday, September 20, 2023 (5:00 PM) |

The members who cast their vote through remote e-voting may attend the AGM but will not be allowed to vote again at the AGM. The detailed instructions for casting the vote through e-voting are attached to the AGM Notice as well as available on the Company's website atwww.udayjewellery.com and on websites at www.evotingindia.com and www.bseindia.com.

Any person who becomes a Member of the Company after the dispatch of the Notice convening the AGM and holds shares as on the cut-off date may obtain the log-in ID and password by sending a request to helpdesk.evoting@cdslindia.com or bsshyd@bigshareonline.com. However, if such person is already registered with CDSL for e-voting then s/he can use his/her existing USER ID and password for casting vote. Any person who is not a shareholder as on the cut-off date may consider this notice for informational purposes only.

**Attendance to the AGM through VC/OAVM:**

Members are requested to note, that in view of the MCA Circulars, the Company is pleased to provide attendance to the AGM through VC/OAVM facility. The Shareholders will be required to log in on www.evotingindia.comusing their e-voting User ID and password. The link to view and participate in the AGM proceedings will be available on www.evotingindia.com. The details for participation in the AGM, registration as a speaker and to ask questions on the agenda for the AGM are included in the Notes to the AGM Notice. The members are requested to refer the same in detail. Members who have not updated their e-mail addresses are requested to update the same with their DP by sending a written request by email to bsshyd@bigshareonline.com.

In case of any queries/grievances, connected with the facility for voting by electronic means, please contact Mr. Rakesh Dalvi, Sr. Manager, and CDSL email; evoting@cdslindia.com or call 1800225533,022-23058542/43. Members may contact Mr. S.D. Prabhakar, Deputy General Manager, Big share Services Private Limited, Hyderabad on phone number 040-40144967 or by e-mail at bsshyd@bigshareonline.com.

The instructions for e-voting and participation in the AGM shall also form a part of the AGM Notice of the Company, which shall be available on the website of the Company, CDSL, and the Stock Exchanges. This Advertisement is being published in compliance with the MCA Circulars and for the information of the members as is available on the Stock Exchanges website and the website of the Company.

We urge all members to update their information at the earliest to receive the AGM Notice, Annual Report, and e-voting credentials (as applicable).

By Order of the Board of Directors
**For Uday Jewellery Industries Limited**
Sd/-
Ritesh Kumar Sanghi
Managing Director
**DIN: 00628033**

**Date:29.08.2023**
**Place:Hyderabad**

## DCX SYSTEMS LIMITED

**(Formerly known as DCX Cable Assemblies Pvt Ltd)**
**Regd. Office Address: Aerospace SEZ Sector, Plot Nos. 29,30 and 107, Hitech Defence and Aerospace Park, Kavadadasanahalli, Bengaluru Rural – 562110, Karnataka, India. Tel: 080-67119555 CIN: L31908KA2011PLC061686. Web: www.dcxindia.com Email:cs@dcxindia.com**

### NOTICE OF THE 12th ANNUAL GENERAL MEETING (AGM) AND E-VOTING INFORMATION

Notice is here by given that the 12 th Annual General Meeting (AGM) of the Members of the Company will be held on Monday, September 25, 2023 at 04:00 P.M. (IST) through Video Conferencing ("VC") or Other Audio Visual Means("OAVM"), to transact the business set out in the Notice convening the 12 th AGM ('Notice'), in compliance with the applicable provisions of the Companies Act, 2013 ("Act"), the General Circular No. 10/ 2022 and General Circular No. 11/ 2022 dated December 28, 2022 issued by the Ministry of Corporate Affairs (the 'MCA') and Circular no. SEBI/ HO/ CFD/ PoD- 2/P/ CIR/ 2023/ 4 dated January 5,2023 issued by Securities Exchange Board of India ('SEBI'), (hereinafter collectively referred as 'Circulars'), and SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015 ("Listing Regulations").

Electronic copies of the Notice of the 12th AGM, procedure and instructions for e-voting and the Annual Report for the Financial Year 2022-23 has been sent on August 30, 2023, to all those Members whose email IDs are registered with their Depository Participant(s) ("DPs)/ Registrar & Transfer Agent ("RTA") of the Company, i.e., Link Intime India Private Limited ('LIIPL'), as the case may be.

The Notice of the 12th AGM and the Annual Report for the Financial Year 2022-23 are also available on the website of the Company at https://dcxindia.com/investors/ and on the websites of BSE Limited at https://www.bseindia.com and National Stock Exchange of India Limited at https://www.nseindia.com.

The dispatch of Notice of the AGM through electronic mode has been completed on August 30, 2023.

Pursuant to Section 108 of the Companies Act, 2013 read with applicable Rules and Regulation 44 of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015, members are provided with the facility to exercise their vote by electronic means on all the resolutions set out in the Notice. In this connection, Members are hereby Informed that:

1. Proceedings of the AGM will be web-casted live for those who are the Members as on the cut-off date i.e., 18th September 2023, Members may visit https://instameet.linkintime.co.in and login through existing user id and password to watch the live proceedings of the AGM. Facility for joining the AGM shall be open 30 minutes before the scheduled time for commencement of AGM and shall be closed 30 minutes after such scheduled time.
2. The Company has appointed M/s. Link Intime India Pvt. Ltd., Registrars and Transfer Agents ( 'Link Intime' or 'RTA' ), to provide VC

தமிழ் முரசு

# சென்னை-லண்டன் நேரடி விமான சேவை ஒரு வாரமாக ரத்து; பயணிகள் அவதி

**மீனம்பாக்கம், செப். 1-** சென்னை விமானநிலையத்தில் கடந்த ஒரு வாரகாலமாக பிரிட்டிஷ் ஏர்வேஸ் நிறுவனத்தின் நேரடி விமான சேவை ரத்து செய்யப்பட்டு உள்ளது. இதனால் லண்டனுக்கு நேரடியாக செல்லும் விமானப் பயணிகள் பெரிதும் அவதிப்பட்டு வருகின்றனர். லண்டனில் சர்வர் பிரச்னை உள்பட பல்வேறு தொழில்நுட்ப கோளாறு காரணமாக விமான சேவை ரத்து செய்யப்பட்டு உள்ளதாகவும், விரைவில் விமான சேவை துவங்கும் என சென்னை விமானநிலைய அதிகாரிகள் தகவல் தெரிவித்தனர்.

சென்னை விமான நிலையத்தின் சர்வதேச விமான முனையத்தில் இருந்து லண்டனுக்கு நாள்தோறும் பிரிட்டிஷ் ஏர்வேஸ் விமான நிறுவனம் நேரடி விமான சேவையை தினமும் இயக்கி வருகிறது. இந்த விமானம் ஒவ்வொரு நாளும் அதிகாலை 3.15 மணியளவில் லண்டனில் இருந்து சென்னைக்கு வந்துவிட்டு, மீண்டும் அதிகாலை 5.30 மணியளவில் சென்னையில் இருந்து லண்டனுக்குப் புறப்பட்டு செல்லும். இது, சென்னையில் இருந்து லண்டனுக்கு நேரடி விமான சேவை என்பதாலும், அங்கிருந்து ஸ்காட்லாந்து, பிரேசில்ஸ், ரோம், பாரிஸ், நியூயார்க், வாஷிங்டன், சிகாகோ உள்பட பல்வேறு இடங்களுக்கு அதிகளவில் இணைப்பு விமானங்கள் இருப்பதால், சென்னை-லண்டன்-சென்னை இடையே தினசரி இயக்கப்படும் நேரடி விமானத்தில் பயணிகளின் கூட்டம் நிரம்பி வழிந்து கொண்டிருக்கிறது.

எனினும், கடந்த ஒரு வாரகாலமாக சென்னை-லண்டன்-சென்னை இடையே பிரிட்டிஷ் ஏர்வேஸ் நிறுவனத்தின் விமானம் இயக்கப்படவில்லை. இதனால் சென்னையில் இருந்து லண்டனுக்கு நேரடியாக செல்ல வேண்டிய பயணிகள், தற்போது துபாய், கத்தார், அபுதாபி, பிராங்க்பர்ட் வழியாக லண்டன் செல்லவேண்டிய அவலநிலை ஏற்பட்டுள்ளது. சென்னையில் இருந்து லண்டனுக்கு நேரடியாக செல்லாமல், மாற்று வழியில் இணைப்பு விமானங்கள் மூலம் செல்வதால் பயணிகளுக்கு கால விரயம் அதிகரிப்பதோடு, கூடுதல் கட்டண செலவுகளால் பயணிகளுக்கு பல்வேறு பிரச்னைகள் ஏற்படுகின்றன. இதனால் சென்னை-லண்டன் இடையே மீண்டும் நாள்தோறும் நேரடி விமான சேவையை துவக்க வேண்டும் என பயணிகள் வலியுறுத்துகின்றனர்.

இது குறித்து சென்னை விமான நிலைய அதிகாரிகளிடம் விசாரித்த போது, பிரிட்டிஷ் ஏர்வேஸ் விமான நிறுவனத்தின் தலைமையகமான லண்டன் அலுவலகத்தில் திடீரென சர்வர் பிரச்னை உள்பட பல்வேறு தொழில்நுட்பக் கோளாறுகள் ஏற்பட்டுள்ளன. இதனால் சர்வதேச அளவில் இயக்கப்பட்டு வந்த 200க்கும் மேற்பட்ட பிரிட்டிஷ் ஏர்வேஸ் விமான சேவைகள் தற்காலிகமாக ரத்து செய்யப்பட்டு உள்ளன. அந்தத் தொழில்நுட்பக் கோளாறுகளை சீரமைக்கும் பணிகள் துரிதகதியில் நடைபெற்று வருகின்றன.

அத்தொழில்நுட்ப கோளாறுகள் முழுமையாக சீரமைக்கப்பட்டு, விரைவில் சென்னை-லண்டன்-சென்னை இடையே மீண்டும் பிரிட்டிஷ் ஏர்வேஸ் விமான சேவைகள் வழக்கம் போல் செயல்படத் துவங்கும் என்று சென்னை விமானநிலைய அதிகாரிகள் தகவல் தெரிவித்தனர்.

சென்னை பூந்தமல்லி நெடுஞ்சாலை மழைநீர் வடிகால்வாயை கூவத்தில் இணைக்கும் வகையில் எழும்பூர் அம்பேத்கர் பள்ளி பின்புறம் சிமெண்ட் உருளைகள் பொருத்தும் பணி நடைபெற்று வருகிறது.

### ₹20 கோடி சொத்து அபகரிப்பு புகார்

# அதிமுக ஒன்றிய தலைவர் வீட்டில் சிபிசிஐடி அதிரடி சோதனை

## மன்னார்குடியில் பரபரப்பு

**மன்னார்குடி, செப். 1-** சொத்து அபகரிப்பு புகார் தொடர்பாக மன்னார்குடியில் அதிமுக ஒன்றிய தலைவர் வீட்டில் சிபிசிஐடி போலீசார் இன்று அதிரடி சோதனை நடத்தினர்.

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி கர்த்தநாதபுரத்தை சேர்ந்தவர் ரோஸ்லின். இவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் கடந்தாண்டு ஒரு மனு தாக்கல் செய்தார். அதில், தனது மாமியாரான ஞானம்பாள் பெயரிலான ரூ.20 கோடி மதிப்புள்ள சொத்துக்களை போலி ஆவணங்கள் தயாரித்து மோசடி செய்துள்ளனர். இந்த மோசடியில் மன்னார்குடி ஒன்றியக்குழு தலைவரான அதிமுகவை சேர்ந்த மனோகரன் (58) உள்ளிட்ட 10 பேர் ஈடுபட்டுள்ளனர். இதுகுறித்து 2017ம் ஆண்டு திருவாரூர் எஸ்பியிடம் புகார் அளித்தேன். அதன் பேரில் மனோகரன் உட்பட 10 பேர் மீது மாவட்ட குற்றப்பிரிவு போலீசார் வழக்குப்பதிந்து விசாரித்தனர். ஆனால் நடவடிக்கை எடுக்கவில்லை. எனவே இந்த வழக்கை சிபிசிஐடி விசாரணைக்கு மாற்றி உத்தரவிட வேண்டும் என்று மனுவில் தெரிவித்திருந்தார்.

மனோகரன்

சென்னை உயர் நீதிமன்றத்தில் ரோஸ்லின் மனு மீதான விசாரணை கடந்த ஏப்ரல் 27ம் தேதி நடந்தது. நீதிபதி சந்திரசேகரன் விசாரணை நடத்தி இந்த வழக்கை சிபிசிஐடிக்கு மாற்றி உத்தரவிட்டார்.

இந்த வழக்கு விசாரணை இப்போது சூடு பிடிக்க துவங்கி உள்ளது. மன்னார்குடி கன காம்பாள் கோயில் தெருவில் உள்ள மனோகரன் வீட்டுக்கு தஞ்சை சிபிசிஐடி டிஎஸ்பி அன்பழகன் தலைமையில் இன்ஸ்பெக்டர் தமிழ்செல்வி உள்ளிட்ட 10க்கும் மேற்பட்டோர் 2 கார்களில் இன்று காலை 7 மணிக்கு வந்தனர். பின்னர் மனோகரன் வீட்டுக்குள் சென்று அதிரடி சோதனையில் ஈடுபட்டனர். அதிமுக பிரமுகர் வீட்டில் சிபிசிஐடி போலீசார் அதிரடி சோதனை நடத்திய சம்பவம் மன்னார்குடியில் பரபரப்பை ஏற்படுத்தியது.

செப்டம்பர் 1, 2023 வெள்ளிக்கிழமை

# வெற்றி பாய்ச்சல்!

சந்திரனை ஆராயும் சந்திரயான் 3 வெற்றியைத் தொடர்ந்து, சூரியனை ஆராய ஆதித்யா எல்-1 விண்கலத்தை நாளை விண்ணுக்கு அனுப்புகிறது இஸ்ரோ.

இந்த விண்கலம், சுமார் 127 நாள்கள் பயணித்த பின்னரே, தான் நிலைகொள்ள வேண்டிய எல்-1 புள்ளியை அடையும். 'பூமிக்கும் ஈர்ப்பு விசை இருக்கிறது, சூரியனுக்கும் ஈர்ப்பு விசை இருக்கிறது. பூமிக்கும் சூரியனுக்கும் இடையே உள்ள நேர்க்கோட்டில் ஏதாவது ஒரு புள்ளியில் இரண்டின் ஈர்ப்பும் சமமாக இருக்கும். அந்த ஈர்ப்பு விசை சமப்புள்ளிதான் லக்ராஞ்சியன் புள்ளி எல்-1' எனப்படுகிறது.

பூமியிலிருந்து சுமார் 15 லட்சம் கி.மீ. தொலைவில் சூரியனை நோக்கி இந்தப் புள்ளி அமைந்துள்ளது. பூமிக்கும் சூரியனுக்கும் இடையே உள்ள தொலைவு 1,510.7 லட்சம் கி.மீ. அதாவது, பூமிக்கும் சூரியனுக்கும் இடையே உள்ள தொலைவில் நூறில் ஒருபங்கு தொலைவில் இந்த விண்கலம் நிலைநிறுத்தப்படும்.

சூரியன், பூமி இரண்டின் ஈர்ப்பு விசையில் சமமாக இழுபட்டு நிற்பதால் பூமியோடு சேர்ந்து இந்தப் புள்ளியில் உள்ள விண்கலம் சூரியனைச் சுற்றிவரும். எனவே, ஒவ்வொரு கணமும் பூமிக்கும் சூரியனுக்கும் இடையே இந்த விண்கலம் நிலைநிற்கும். சூரியப் புயல் அல்லது சூரியச் சூறாவளி ஏற்படும்போது முதலில் இந்த விண்கலத்தைத் தாக்கும். இந்த விண்கலம் அதனை உணர்ந்து காந்தப் புயல் குறித்த முன்னெச்சரிக்கையை நமக்குத் தரும். நாம் முன்கூட்டியே பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்துகொள்ளலாம்.

சூரியனின் இயல்பான இயக்கம் அவ்வப்போது மாறி, சீற்றம் கொள்ளும். சூரியச் சூறாவளி, சூரிய ஒளிப்புயல், சூரிய வெடிப்பு என்கிற மூன்று முக்கியச் சீற்றங்கள் காந்தப்புயலை ஏற்படுத்தி பூமியின் மீது தாக்கம் செலுத்தும். காந்தப் புயலின் விளைவாக மனிதர்களுக்கும் உயிரினங்களுக்கும் எந்த ஆபத்தும் இல்லை. தீவிர காந்தப் புயல் பூமியைச் சுற்றியுள்ள அயனி மண்டலத்தை ஆட்டம்கொள்ள வைக்கும். இதன் தொடர்ச்சியாக சிற்றலை ரேடியோ தகவல்தொடர்பில் பாதிப்பு ஏற்படும். நாடு விட்டு நாடு செல்லும் விமானங்கள், சரக்குக் கப்பல்கள் முதலியவை சிற்றலை ஒலிபரப்பைப் பயன்படுத்துகின்றன.

சூரியனின் மேற்புற வெப்பம் சுமார் 5,600 டிகிரி செல்சியஸ். ஆனால், அதைத் தாண்டி சூரியனைச் சுற்றிப் படர்ந்துள்ள கரோனா எனும் வளிமண்டலப் பகுதியில் வெப்பநிலை பல லட்சம் டிகிரி செல்சியஸ். இது குறித்தும் ஆதித்யா எல்-1 ஆய்வு நடத்தும். சூரியக் காற்றின் வேகம், திசை, மின்னேற்றம் முதலியவற்றை ஆராயும்.

சூரியப் புயல் அல்லது சூரியச் சூறாவளி கடந்து செல்கிறதா என அறிய முடியும். மேலும், காந்தப்புல அளவைமானிவழியே காந்தப் புயல் ஏற்படுகிறதா எனவும் முன்கூட்டியே அறிய முடியும். இதுவரை அமெரிக்கா, ஐரோப்பிய விண்வெளிக் கழகம், ஜப்பான், சீனா மட்டுமே சூரியனை ஆய்வுசெய்ய விண்வெளித் தொலைநோக்கிகளை அனுப்பியுள்ளன. இந்த முயற்சி வெற்றியடையும்போது இந்தியா ஐந்தாவது நாடாகும்.

நிலவில் சந்திரயான் 3 கால் பதித்த கையோடு சூரியனை நோக்கி வெற்றிப்பாய்ச்சலை தொடங்கியுள்ள இஸ்ரோவின் முயற்சி வெற்றியடைய பிரார்த்திப்போம்.


**சன் டிவி நெட்வொர்க் லிமிடெட்**

SUN NETWORK

CIN: L22110TN1985PLC012491

முரசொலி மாறன் டவர்ஸ், 73, எம்.ஆர்.சி. நகர் பிரதான சாலை, எம்.ஆர்.சி. நகர், சென்னை–600 028. தொலைபேசி எண் 044–44676767 பேக்ஸ்: 044–40676161

மின்னஞ்சல்: tvinfo@sunnetwork.in இணையதளம்: www.suntv.in

நிறுவனத்தின் பங்குதாரர்களின் 38வது ஆண்டு பொதுக்கூட்டம் (AGM) செப்டம்பர் 22, 2023 வெள்ளிக்கிழமை காலை 10:00 மணிக்கு (IST) வீடியோ கான்பரன்சிங் ("VC") / பிற ஆடியோ–விஷுவல் ("OAVM") மூலம் நடைபெறும் என்று இதன்மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது. நிறுவனச் சட்டம், 2013 இன் பொருந்தக்கூடிய விதிகளுக்கு இணங்க, இடத்தில் உறுப்பினர்களின் உடல் இருப்பு இல்லாமல் பொருள், பொதுச் சுற்றறிக்கை எண். 20/2020 மே 5, 2020 மற்றும் 10/2022 தேதியிட்ட 28 டிசம்பர், 2022 கார்ப்பரேட் விவகார அமைச்சகத்தால் (MCA) வெளியிடப்பட்ட SEBI சுற்றறிக்கை SEBI/HO/CFD/CMD1/ CIR/P/2020/79 தேதியிட்ட மே 12, 2020 மற்றும் SEBI சுற்றறிக்கை SEBI/HO/CFD/ PoD–2/P/CIR உடன் படிக்கப்பட்டது ஜனவரி 5, 2023 தேதியிட்ட /2023/4 மேற்படி கூட்டம் நடைபெறும் இடம் நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகமாகக் கருதப்படும். உறுப்பினர்கள் VC/OAVM மூலம் மட்டுமே AGM இல் கலந்து கொள்ளலாம் மற்றும் பங்கேற்கலாம். AGM இல் சேர்வதற்கான விரிவான வழிமுறைகள், VC/OAVM மூலம் கூட்டத்தில் கலந்து கொள்ளும் AGM உறுப்பினர்களின் அறிவிப்பில் வழங்கப்படும், நிறுவனங்கள் சட்டம், 2013 இன் பிரிவு 103 இன் கீழ் கோரம் கணக்கிடும் நோக்கத்திற்காக கணக்கிடப்படும்.

மேற்கூறிய சுற்றறிக்கைகளுக்கிணங்க, ஆண்டு அறிக்கை 2022–23 உடன் வருடாந்திர பொதுக் கூட்டத்தின் அறிவிப்பானது நிறுவனம்/ வைப்பகங்களில் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்திருக்கும் உறுப்பினர்களுக்கு மின்னணு முறை மூலம் மட்டும் அனுப்பப்படுகின்றன. அறிவிப்பு மற்றும் ஆண்டு அறிக்கை 2022–23 ஆகியவை நிறுவனத்தின் இணையதளம் www.suntv.in, பங்கு பரிவர்த்தனைகள் அதாவது BSE லிமிடெட் மற்றும் இந்திய தேசிய பங்கு பரிவர்த்தனை லிமிடெட் ஆகியவற்றின் இணையதளங்கள் முறையே www.bseindia.com மற்றும் www.nseindia.com, மேலும் நிறுவனத்தின் பதிவாளர் மற்றும் பரிவர்த்தனை முகவர், M/s. கேஃபின் டெக்னாலஜிஸ் லிமிடெடின் (KFinTech) இணையதளம் https://evoting.kfintech.com ஆகியவற்றிலும் கிடைக்கப்பெறும் என்பதை உறுப்பினர்கள் கவனத்தில் கொள்ளவும்.

காகித முறையில் பங்குகளை வைத்திருக்கும் மேலும் நிறுவனத்தில் தங்கள் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்யாது / புதுப்பிக்காதிருக்கும் உறுப்பினர்கள் அதை எழுத்துப்பூர்வமாக நிறுவனத்தின் பதிவாளர் மற்றும் பங்கு பரிவர்த்தனை முகவர், கேஃபின்டெக்குக்கு அனுப்பி அல்லது அவர்தம் மின்னஞ்சல் முகவரி einward.ris@kfintech.com இல், மின்னஞ்சல் முகவரி, கைபேசி எண், பான் அட்டை மற்றும் பங்கு சான்றிதழின் சுய சான்றுரைக்கப்பட்ட நகல் ஆகியவற்றுடன் விண்ணப்ப கடிதத்தின் கையொப்பமிட்ட ஸ்கேன் நகலுடன் மின்னஞ்சல் செய்து பதிவு செய்யுமாறு / புதுப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். காகிதம்சாரா முறையில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள் சம்பந்தப்பட்ட வைப்பக பங்கேற்பாளரிடம் தங்கள் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்யுமாறு / புதுப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

நிறுமங்கள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள், 2014 (திருத்தப்பட்டவாறு) இன் விதி 20 உடன் நிறுமங்கள் சட்டம், 2013 இன் பிரிவு 108 மற்றும் செபி (பட்டியல் கடப்பாடுகள் & வெளியீடு தேவைகள்) ஒழுங்குவிதிகள் 2015 (திருத்தப்பட்டவாறு) இன் ஒழுங்குவிதி 44 மற்றும் ஜசிஎஸ்ஐ மேலும் கார்ப்பரேட் விவகாரங்கள் அமைச்சகம் சுற்றறிக்கைகள் மூலம் வழங்கப்பட்ட பொதுக்கூட்டம் மீதான செயலாட்சி தரநிர்ணயம் (SS–2) ஆகியவற்றின் விதிமுறைகளை பின்பற்றி, நிறுவனமானது வருடாந்திர பொதுக் கூட்டத்தில் வர்த்தகம் தொடர்பாக செயல்படுத்தப்படுவதற்கு உறுப்பினர்களுக்கு தொலைதூர மின்–வாக்குப்பதிவு வசதியினை அளிக்கும். இதற்காக, நிறுவனமானது மின்னணு முறையில் வாக்களிக்கும் வசதிக்காக கேஃபின்டெக் உடன் ஒரு ஒப்பந்தத்தை நிறைவேற்றியிருக்கிறது.

வரம்பு தேதியன்று அதாவது செப்டம்பர் 14, 2023 அன்று உறுப்பினர்கள் பதிவேட்டில் அல்லது வைப்பகங்களால் பராமரிக்கப்படும் பயனாளர் உரிமையாளர்கள் பதிவேட்டில் பெயர் பதிவாகியிருக்கும் நபர் மட்டும் தொலைதூர மின்–வாக்குப்பதிவு வசதியை பெறுவதற்கு தகுதியுறுவர். வருடாந்திர பொதுக் கூட்டம் அறிவிப்பு மற்றும் ஆண்டு அறிக்கை வழங்குவதற்காக கணக்கிடப்பட்ட தேதியான ஆகஸ்ட் 25, 2023 தேதிக்கு பிறகு நிறுவனத்தின் பங்குகளை கைப்பற்றியிருக்கும் மேலும் நிறுவனத்தின் உறுப்பினராகியிருக்கும் மேலும் வரம்பு தேதியன்று அதாவது செப்டம்பர் 14, 2023 அன்று பங்குகளை வைத்திருக்கும் அல்லது வருடாந்திர பொதுக் கூட்டம் அறிவிப்பு வழங்கிய பிறகு அவருடைய / அதனுடைய மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்திருப்போர், தங்கள் ஃபோலியோ எண்/ DP ID மற்றும் வாடிக்கையாளர் அடையாள எண்ணை குறிப்பிட்டு einward.ris@kfintech.com–க்கு மின்னஞ்சல் அனுப்பி பயனாளர் அடையாளம் மற்றும் கடவுச்சொல்லினை பெறலாம். உறுப்பினர்கள் காணொலி காட்சி/ ஒலி–ஒளி வழி மூலம் மட்டும் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு பங்கேற்கலாம், அதன் விவரங்கள் வருடாந்திர பொதுக் கூட்டம் அறிவிப்பில் நிறுவனத்தால் வழங்கப்படும்.

மின்–வாக்குப்பதிவு காலம் செவ்வாய்க்கிழமை, செப்டம்பர் 19, 2023 காலை 9.00 மணிக்கு தொடங்கும் மேலும் வியாழக்கிழமை, செப்டம்பர் 21, 2023 மாலை 5.00 மணிக்கு முடிவடையும்.

உறுப்பினர்கள் மேற்கூறிய தேதி மற்றும் நேரத்திற்கு பிறகு தொலைதூர மின்–வாக்குப்பதிவு மூலம் தங்கள் வாக்கினை பதிவு செய்ய இயலாது மேலும் அதன்பிறகு தொலைதூர மின்–வாக்குப்பதிவு முறை கேஃபின்டெக் மூலம் செயலிழக்க செய்யப்பட்டு விடும்.

கூடுதலாக, கூட்டத்தில் பங்கேற்கும் உறுப்பினர்களுக்கு வருடாந்திர பொதுக் கூட்டத்தின் போது மின்–வாக்குப்பதிவுக்கான வசதி கிடைக்கச்செய்யப்படும் தொலைதூர மின்–வாக்குப்பதிவு மூலம் தங்கள் வாக்கினை ஏற்கனவே பதிவு செய்யாதிருப்போர் வருடாந்திர பொதுக் கூட்டத்தின்போது மின்–வாக்குப்பதிவு மூலம் தங்கள் உரிமையை செயல்படுத்த இயலும். தொலைதூர மின்–வாக்குப்பதிவு மற்றும் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் மின்–வாக்குப்பதிவுக்கான விரிவான நடைமுறை அறிவிப்பில் வழங்கப்பட்டுள்ளன.

திருமதி லட்சுமி சுப்ரமணியன், செயல்படும் நிறுவன செயலாளர், சென்னை அவர்கள் நேர்மை மற்றும் வெளிப்படையான முறையில் வாக்குப்பதிவு செயல்பாட்டை (மின்னணு முறையில் அல்லது மற்றவகையில்) நடத்துவதற்கான ஆய்வாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஆய்வாளர் அறிக்கையுடன் அறிவிக்கப்பட்ட முடிவுகள் நிறுவனத்தின் இணையதளம் www.suntv.in மற்றும் கேஃபின் டெக் இணையதளம் https://evoting.kfintech.com இல் வெளியிடப்படும் மேலும் அதேவேளையில் நிறுவனத்தின் பங்குகள் பட்டியலிடப்பட்டிருக்கும் BSE லிமிடெட் மற்றும் இந்திய தேசிய பங்கு பரிவர்த்தனை லிமிடெட், மும்பைக்கு, வருடாந்திர பொதுக் கூட்டம் முடிவடைந்த பிறகு 48 மணி நேரத்துக்கு மிகாமல் தகவல் அனுப்பப்படும்.

மின்னணு முறையில் வாக்களிப்பது தொடர்பான அனைத்து விசாரணை/குறைகள் நிறுவன செயலாளர் & இணக்க அதிகாரி, சன் டிவி நெட்வொர்க் லிமிடெட், முரசொலி மாறன் டவர்ஸ், 73, எம்.ஆர்.சி. நகர் பிரதான சாலை, எம்.ஆர்.சி. நகர், சென்னை – 600 028 தொலைபேசி: +91 44 4467 6767 பேக்ஸ்: +91 44 4067 6161 மின்னஞ்சல்: tvinfo@sunnetwork.in அல்லது M/s. கேஃபின் டெக்னாலஜிஸ் லிமிடெட், செலீனியம் டவர் B, மனை எண்கள் 31 & 32, கச்சிபௌலி நிதி மாவட்டம், ஹைதராபாத்–500 032, தொலைபேசி எண் 040–67162222 மற்றும் கட்டணமில்லா எண் 1800–309–4001 அவர்களுக்கு முகவரியிட்டு அனுப்பலாம் அல்லது அனைத்து மேற்கொண்டு சந்தேகதீர்வுகளுக்கும் einward.ris@kfintech.com முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பலாம்.

சன் டிவி நெட்வொர்க் லிமிடெடுக்காக
ஓம்/–
R. ரவி
நிறுவன செயலாளர் & இணக்க அதிகாரி

இடம்: சென்னை
நாள்: 31.08.2023


# பிரபல மலையாள நடிகை தூக்கு போட்டு தற்கொலை

## திருவனந்தபுரத்தில் பரபரப்பு

**திருவனந்தபுரம், செப்.1-** பிரபல மலையாள சினிமா மற்றும் டிவி நடிகை அபர்ணா நாயர் வீட்டில் தூக்கு போட்டு தற்கொலை செய்து கொண்டார். இது குறித்து போலீசார் தீவிரமாக விசாரித்து வருகின்றனர்.

நடிகை அபர்ணா நாயர்

திருவனந்தபுரம் கரமனை தளியில் பகுதியைச் சேர்ந்தவர் அபர்ணா நாயர் (36). பிரபல நடிகை ஆவார். மேக தீர்த்தம், முத்துகவு, அச்சாயன்ஸ், கோடதி சமக்ஷம் பாலன் வக்கீல், கல்கி உள்பட மலையாளப் படங்களிலும், ஏராளமான டிவி தொடர்களிலும் நடித்து இருக்கிறார்.

இந்தநிலையில் நேற்று இரவு திருவனந்தபுரத்தில் உள்ள வீட்டில் மின் விசிறியில் தூக்கு போட்டு இறந்த நிலையில் காணப்பட்டார். இதை பார்த்ததும் அவரது வீட்டில் இருந்த தாயும், தங்கையும் அதிர்ச்சி அடைந்தனர். தொடர்ந்து பக்கத்து வீட்டினரின் உதவியுடன் அபர்ணா நாயரை மீட்டனர்.

பின்னர் உடனடியாக திருவனந்தபுரத்தில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அவரை பரிசோதித்த டாக்டர்கள் ஏற்கனவே அபர்ணா நாயர் இறந்து விட்டதாக கூறினர். இதைகேட்டு குடும்பத்தினர் அனைவரும் கதறி அழுதனர்.

நடிகை அபர்ணா நாயருக்கு, ரஞ்சித் என்ற கணவரும், 2 மகள்களும் உள்ளனர். இது குறித்து கரமனை போலீசில் புகார் செய்யப்பட்டது. அதன் பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து நடிகை அபர்ணா நாயர் தற்கொலை செய்தற்கான காரணம் என்ன? என்பது குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

### போலி பாஸ்போர்ட்டில்

# மலேசியா செல்ல முயன்ற பயணி கைது

**மீனம்பாக்கம், செப். 1-** சென்னை சர்வதேச விமானநிலைய முனையத்தில் இருந்து நேற்றிரவு போலி பாஸ்போர்ட் மூலமாக மலேசியாவுக்கு செல்ல முயன்ற நாகப்பட்டினம் மாவட்டத்தை சேர்ந்த பயணியை விமானநிலைய குடியுரிமை அதிகாரிகள் கைது செய்து, மத்திய குற்றப்பிரிவு போலீசில் ஒப்படைத்தனர். பிடிபட்ட பயணியிடம் போலீசார் தீவிரமாக விசாரிக்கின்றனர்.

சென்னையில் இருந்து நேற்றிரவு மலேசிய நாட்டின் தலைநகர் கோலாலம்பூருக்கு செல்லும் பாத்திக் ஏர்லைன்ஸ் பயணிகள் விமானம் தயார்நிலையில் இருந்தது. இதில் செல்லவேண்டிய பயணிகளின் உடைமைகள், பாஸ்போர்ட் உள்பட பல்வேறு முக்கிய ஆவணங்களை விமானநிலைய குடியுரிமை அதிகாரிகள் பரிசோதித்து, அவர்களை விமானத்தில் ஏறுவதற்கு அனுப்பி கொண்டிருந்தனர். அப்போது, நாகப்பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்த அகமது முஸ்தபா (44) என்பவர் சுற்றுலா விசாவில் மலேசியாவுக்கு செல்ல வந்துள்ளார். அவரது பாஸ்போர்ட்டின்மீது குடியுரிமை அதிகாரிகளுக்கு சந்தேகம் எழ, அந்த பாஸ்போர்ட்டை கம்ப்யூட்டரில் வைத்து ஆய்வு செய்தனர். இந்த ஆய்வில், அது போலி பாஸ்போர்ட் என விமானநிலைய குடியுரிமை அதிகாரிகளுக்கு தெரியவந்தது.

இதைத் தொடர்ந்து, நாகப்பட்டினத்தை சேர்ந்த அகமது முஸ்தபாவின் மலேசிய பயணத்தை அதிகாரிகள் ரத்து செய்தனர். மேலும், அவரை தனியறையில் வைத்து, எதற்காக போலி பாஸ்போர்ட்டில் மலேசியாவுக்கு செல்ல முயன்றார், இவர்மீது ஏதாவது வழக்குகள் இருந்து, வெளிநாட்டுக்கு போலி பாஸ்போர்ட்டில் தப்பி செல்ல முயற்சித்தாரா அல்லது இவரது பாஸ்போர்ட் முடக்கப்பட்டதால் போலி பாஸ்போர்ட்டை பயன்படுத்துகிறாரா, இவர் எந்த ஏஜென்ட் மூலம் போலி பாஸ்போர்ட் வாங்கியுள்ளார் என பல்வேறு கோணங்களில் விசாரித்தனர்.

பின்னர் நாகப்பட்டினத்தை சேர்ந்த அகமது முஸ்தபாவை சென்னை மத்திய குற்றப்பிரிவு போலீசில் ஒப்படைத்தனர். அவரை போலீசார் கைது செய்து, இதன் பின்னணியில் யார், யார் உள்ளனர், அவர் மாபியா கும்பலை சேர்ந்தவரா என சென்னை மத்திய குற்றப்பிரிவு அலுவலகத்தில் வைத்து போலீசார் தீவிரமாக விசாரித்து வருகின்றனர். இதனால் அங்கு பரபரப்பு நிலவியது.


தமிழ்நாடு அரசு
இந்து சமய அறநிலையத்துறை
அருள்மிகு கூடலழகர் திருக்கோயில், மதுரை நகர்
மின்னணு முறை ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண். 452, நாள்: 30.08.2023
ஒப்பந்த வகை : விலை விகித முறை

மதுரை மாவட்டம், மதுரை நகர், அருள்மிகு கூடலழகர் திருக்கோயில், உதவி ஆணையர்/செயல் அலுவலர் அவர்களால் திருக்கோயில் வளாகத்தில் கீழ்வானும் பணிக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளி வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளி படிவம் 07.09.2023 முதல் 21.09.2023 முடிய தமிழ்நாடு அரசின் அதிகாரப்பூர்வ ஒப்பந்தப்புள்ளி இணையதளம் (https://tntenders.gov.in) மூலம் ஒப்பந்தப்புள்ளிகளை பதிவேற்றம் செய்து கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளிகள் இணையதளத்தில் 22.09.2023 முற்பகல் 11 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும். பெறப்பட்ட இணையதள ஒப்பந்தப்புள்ளிகள் 22.09.2023 பிற்பகல் 03.30 மணியளவில் இணையதளம் மூலம் திறக்கப்படும். மேலும் முன்வைப்புத் தொகையினை மின்னணு நிதி பரிமாற்றம் மூலம் மட்டுமே செலுத்தப்பட வேண்டும். இதர விபரங்களை இவ்வலுவலகத்தில் வேலைநாட்களில் வேலை நேரத்தில் கேட்டுத்தெரிந்து கொள்ளலாம்.

| வ. எண் | பணியின் பெயர் | ஒப்பந்தத் தொகை ரூ. | முன் வைப்புத் தொகை ரூ. | பணி முடிக்க வேண்டிய காலம் | ஒப்பந்ததாரர் தகுதி |
|---|---|---|---|---|---|
| 1 | இத்திருக்கோயில் வளாகத்தில் புதியதாக அன்னதான மண்டபம் கட்டும் பணி | 94,01,100/- | 57,100/- | 12 மாதங்கள் | தமிழ்நாடு அரசுத்துறை / அரசு நிறுவனங்களில் பதிவுபெற்ற நடப்பில் உள்ள தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்கள் |

மு.இராமசாமி எம்.ஏ.,
தக்கார்

ஜி.செல்வி பி.ஏ., பி.எல்.,
உதவி ஆணையர்/செயல் அலுவலர்

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"

செ.ம.தொ.இ.4854/ஒப்பந்தப்புள்ளி/2023



குங்குமம் செப்டம்பர் 1-15, 2023
தோழி
உள்ளம் கவர்ந்தவள்

குங்குமம் தோழி SOWBAGHYA மற்றும் இணைந்து வழங்கும்
மாபெரும் பரிசுப் போட்டி
SOWBAGHYA Mixie
25 பேருக்கு
Coral Mixer Grinder

விடியற்காலை சுடச்சுட தயாராகும் காஞ்சிபுர இட்லி!

என் தயாரிப்பில் நோ சீக்ரெட்
Fit & Food மும்தாஜ் அம்மா

பாடாய்படுத்தும் கழுத்து வலி பாதுகாத்திடும் இயன்முறை மருத்துவம்!

ஒரு கப் மொரிங்கா டீ! ஆரோக்கியத்திற்கு கியாரண்டி

நியூயார்க் மிஷலான் ஸ்டார் உணவக மெனுவில் 'மோர் களி'!
ஃபுட் கன்டென்ட் கிரியேட்டர் அருணா விஜய்

குங்குமம் தோழி மற்றும் SOWBAGHYA இணைந்து வழங்கிய SOWBAGHYA Nonstick Cookware Set மற்றும் SOWBAGHYA Electric Kettle
பரிசுப் போட்டியின் முடிவுகள்

இப்போது விற்பனையில்...


Printed and published by **R.M.R. Ramesh** on behalf of Kal Publications Private Limited and printed at Dinakaran Press , Plot No.170. No.10, First Main Road, Nehru Nagar, Perungudi, Chennai - 600 096 and Published at 229, Kutchery Road, Mylapore, Chennai - 600 004. Ph.4220 9191. Fax: 4220 9200/01
Editor: **R.M.R. Ramesh**.